DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 3392/14

List of Witness : Lw5

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரஞ்சித்குமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ராசு | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 14/07/2026

(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**சாட்சி காணொலி மூலம் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை மயிலாப்பூர் காவல் நிலையத்தில் குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2014 ஆம் ஆண்டு ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக இருந்தபோது கடந்த 16.04.2014 தேதி 20.30 மணிக்கு ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது தேர்தல் பறக்கும் படை அதிகாரி ராஜகோபால் மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று அதன் பேரில் நிலைய குற்ற எண் 112/2014 பிரிவுகள் 188, 286 இ.த.ச.வாக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார்தாரரின் புகாரையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். **முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு நான் வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினம் பட்டியல் சாட்சிகளான ராஜகோபால், சிறப்பு சார்பு ஆய்வாளர் பாலசுப்ரமணி, தலைமை காவலர் வடிவேல், தலைமை காவலர் ரவிச்சந்திரன் ஆகிய சாட்சிகளை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்கு மூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகள் தலைமறைவாக இருந்ததால் பின்பு எனது புலன் விசாரணை முடித்து

16.04.2014 ஆம் தேதி தலைமறைவாக இருந்த எதிரிகள் மீது பிரிவுகள் 188, 286 இ.த.ச.வாக குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) இந்த வழக்கில் சம்பவ இடத்தில் எட்டு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் நிலையில் அந்த வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் விவரங்களை விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரணை செய்யவில்லை. இந்த வாகனங்கள் எந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது, என்ன நிறமுடையது என்பது குறித்து இந்த வழக்கு கோப்பில் விசாரித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி எட்டு வாகனங்களின் விவரங்களை தெரிந்து கொள்ள வட்டார போக்குவரத்து அதிகாரியை புலன் விசாரணையின் போது விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த பிரச்சாரத்திற்கு என்னிடம் அனுமதி பெற்றார்களா என்றால் என்னிடம் அனுமதி பெறவில்லை , வருவாய் துறையினரிடமிருந்து அனுமதி பெற்று இருக்கலாம் ஆனால் ஆவணங்களை என்னிடம் காட்டவில்லை.

2) இந்த வழக்கின் புகாரில் பிரச்சாரத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரச்சாரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது குறித்து அதிகாரிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.மேற்சொன்ன எட்டு வாகனங்களும் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தது என சொல்லியுள்ள நிலையில் உண்மையிலேயே பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டதா என்று அக்கம் பக்கத்தினரிடம் விசாரித்து அவர்களை சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் பறக்கும்படையினரே சாட்சிகளாக இருந்தார்கள் அதுவே போதுமானதாக இருந்தது அதனால் தனிநபர் சாட்சிகளை விசாரிக்கவில்லை.

3) பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டதாக வழக்கில் சொல்லியுள்ள நிலையில் பொது மக்களை விசாரணை செய்து இருந்தால் உண்மையிலேயே இடையூறு ஏற்பட்டதா என்று தெரியவந்து இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடைபெறாததால் தான் பொது மக்களை சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல, பொதுமக்கள் யாரும் முன்வந்து சாட்சி அளிக்க முன் வரவில்லை. எதிரிகள் தலைமறைவாக இல்லை என்றாலும், அவர்களின் நிலையான முகவரியில் இருந்தார்கள் என்றாலும் சரியல்ல, நான் தேடி சென்றபோது எதிரிகள் அந்த முகவரியில் இல்லை. இவ்வழக்கில் உள்ள 2 எதிரிகளை தவிர்த்து மற்றும் சிலர் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அந்த மற்றும் சிலரை எவ்வாறு நீக்கம் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாததை வைத்தே நான் சம்பவ இடம் செல்லவில்லை என்பதும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்பதும் புலப்படுகிறது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால்

சரியல்ல. தேர்தல் மற்றும் புள்ளிவிவர கணக்கிற்காக எனது மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வழக்கின் எதிரிகள் அரசியல் கட்சிகளில் பொறுப்புகளில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் குறிப்பிட்ட அரசியல் கட்சியில் இருந்தார்கள் என்பதற்காக ஆதாரமாக மாவட்ட செயலாளரிடம் எந்த ஒப்புதல் கடிதமும் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் உண்மையிலேயே அரசியல் கட்சியில் பொறுப்பில் இல்லாததால் தான் அவ்வாறு கடிதம் ஒன்று பெறப்பட்டு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.14 17:59:47 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 14/07/2026